**மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபை**
**மட்டக்களப்பு மாவட்டம்**
------------------------------------------------------------

1 நிதிக்கூற்றுகள்
-----------------

1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்
------------------------------------

2015 ஆம் ஆண்டு நிதிக்கூற்றுக்கள் 2016 யூன் 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததோடு கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 செப்தெம்பர் 29 இல் சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
------------------------------------

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி உள்ளவாறான நிதி நிலைமையினையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்
----------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்
--------------------------------

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்காகச் செலுத்த வேண்டிய ரூபா 16,000 தொகையான கணக்காய்வுக் கட்டணத்திற்காக கணக்குகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வாகனங்களுக்கான அனுமதிப்பத்திரம் மற்றும் காப்புறுதிக் கட்டணத்திற்காக செலுத்தப்பட்ட தொகை ரூபா 14,073 மூலதனச் செலவாக காட்டப்பட்டிருந்தது.

(இ) 2014 ஆம் ஆண்டின் யுநெப்ஸ் (UNOPS) நிறுவனத்திடமிருந்து அன்பளிப்பாக பெறப்பட்ட இரண்டு இழுவைப் பெட்டிகளின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

1.3.2 பெறவேண்டிய கணக்குகள்
--------------------------------

இலங்கை மின்சார சபையிடமிருந்து பெறவேண்டியதாக ரூபா 167,580 தொகை நிதிக்கூற்றுக்களில் 1989 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாகக் காட்டப்பட்டு வருகின்ற போதிலும் அதனை அறவிடுவதற்கோ அல்லது கணக்கிலிருந்து பதிவழிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.3 கணக்காய்வுக்கான சான்றுகள் இன்மை
---------------------------------------------

ரூபா 103,312,993 கூட்டுமொத்தப் பெறுமதியான காணி கட்டிடம், பொறித்தொகுதிகள், இயந்திரங்கள் என்பன தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை.

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்கி ஒழுகாத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் போன்றவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதிகள் | |
| (i) அத்தியாயம் I இன் விதி 5(12) | பணம், களஞ்சியப்பொருட்கள் என்பன நான்கு உத்தியோகத்தர்களுக்கு நிர்வாக ரீதியாக ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் அவர்களிடமிருந்து பாதுகாப்பு பிணை பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ii) அத்தியாயம் X இன் விதி 193 | ஆண்டுக்கான உள்ளபடியான வருமானம் மற்றும் செலவு தொடர்பான விபரங்கள் வரவு செலவுத் திட்டத்துடன் ஒப்பிடப்பட்டு முரண்பாட்டுக்கான விளக்கங்களை உள்ளடக்கிய கூற்று தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் இல. 396 | வழங்கப்பட்ட ஆனால் ஆறு மாதங்களுக்கு மேலாக கொடுப்பனவுக்குச் சமர்ப்பிக்கப்படாத ரூபா 19,967 பெறுமதியான 11 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

## 2. நிதிமீளாய்வு

### 2.1 நிதிவிளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளின் படி 2015 திசெம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 30,429,948 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 6,714,577 ஆக இருந்தமை நிதிவிளைவுகளில் ரூபா 23,715,371 முன்னேற்றத்தைக் காட்டுகின்றது.

### 2.2 வருமான முகாமைத்துவம்

#### 2.2.1 வருமானச் சேகரிப்பின் செயலாற்றல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவிற்கமைய சபையினால் வருமானங்களை அறவிடுவதற்காக உபவிதிகளை சட்டமாக்கத் தவறியதன் காரணமாக சபையின்

அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் தனியார் தொலைத்தொடர்பு நிறுவனங்களால் நிறுவப்பட்ட 12 தொலைத்தொடர்பு கோபுரங்களுக்கான கட்டணத்தை அறவிட முடியாமையால் சபை அண்ணளவாக ரூபா 600,000 தொகை வருமானத்தை வருடாந்தம் இழந்துள்ளது.

(ஆ) களுவாஞ்சிக்குடி பொதுச்சந்தைக் கடைத் தொகுதியின் 19 கடைகளை வாடகைக்கு பெற்றவர்களிடமிருந்து 1991 ஆம் ஆண்டு தொடக்கம் 2003 ஆண்டு வரைக்குமான காலப்பகுதிக்குரிய வாடகை நிலுவை ரூபா 92,676 தொகையை அறவிடுவதற்கு அல்லது ஏடுகளிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு
---------------------------

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை
-----------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் சபைக்கு ஒப்படைக்கப்பட்ட 04 மோட்டார் வாகனங்களின் உரிமையை சபையின் பெயரில் மாற்றம் செய்வதற்கு 04 ஆண்டுகளாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்குச் சொந்தமான ஆயுள்வேத வைத்தியசாலைக்கான வைத்திய அதிகாரியையும், மருந்தகரையும் நியமிப்பதற்கு பொதுத் திறைசேரியினால் 2013 ஜனவரி 01 ஆந் திகதி அனுமதி வழங்கப்பட்ட போதிலும் வைத்தியரை நியமித்து மக்களுக்கு சேவையை வழங்க இன்று வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கையிருப்புப் பொருட்களில் ரூபா 48,216 கூட்டுமொத்தப் பெறுமதியான பொதுப் பாவனைப் பொருட்கள் மற்றும் மின்சார பொருட்கள் 1989 ஆம் ஆண்டிலிருந்து பயன்படுத்த முடியாதவையாக காணப்பட்ட போதிலும் அவற்றை ஏடுகளில் இருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபையின் 08 சந்தைகளுக்கான 1985 ஆம் ஆண்டு தொடக்கம் 2012 ஆண்டு வரையுமான காலப்பகுதிக்குரிய ரூபா 3,110,486 தொகையான குத்தகை நிலுவையை அறவிடுவதற்கு சபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்
-------------------------------------------

கீழ்வரும் கட்டுப்பாட்டுவிடயங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமானமுகாமைத்துவம்
(இ) நிலையானசொத்துக்கட்டுப்பாடு
(ஈ) பதவியினர் கடன் அறவீடு